**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 04-ம் நாள் செவ்வாய்கிழமை

**IA.No.02/2025**

**In**

**O.S No.88/2017**

கணேசன் **......மனுதாரர்/உத்தேச 5 ம் பிரதிவாதி**

**//எதிர்//**

1) பாலவினாயகம்,

2) மகாலிங்கம்,

3) பெரிச்சிராமன்,

4) ராமையா,

5) ஆனந்தராஜ் (இறந்தார்),

6) செல்லையா,

7) அர்ச்சுனன்,

8) கோவிந்தராஜ்,

9) பரமசிவம்,

10) சக்திவேல் (அனைவரும் கம்மங்காடு
மகாணத்தார்கள்நாட்டார்கள் மற்றும் பொதுமக்களின்
பிரதிநிதிகள் என்ற முறையில்) **.....1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 வாதிகள்**

11) சரவணன்,

12) ராசு,

13) சுப்பையா,

14) சரவணன், (அனைவரும் முத்துவயிறு
அம்பலம் உடையப்பதேவர் வகையறாவின்
பிரதிநிதிகள் என்ற முறையில்) **.....10 முதல் 14 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/உத்தேச 5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.ராமநாதன்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 10 வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கை.வீரமணி.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 11 முதல் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

இந்த மனுவானது மனுதாரர்/உத்தேச 2ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 1 விதி 10(2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:-

இந்த வழக்கு வாதிகளால் இதில்கண்ட பிரதிவாதிகள் மீது உரிமைவிளம்பல், செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த நம்பர் வழக்கில் தொடர்புடைய கோவில் சம்மந்தமான அனைத்து விவரங்களும் மனுதாரருக்கு முழுமைமயாக தெரியும். மேலும் அசல் வழக்கு பிரதிவாதிகள் வகையறாவான உடைப்பதேவர் வகையறாவில் முக்கியமான குடும்பத்தினை சார்ந்தவர் ஆவான் வழக்கு தொடர்புடைய அனைத்து விவரங்களும் மனுதாரருக்கு நன்கு தெரியும். வழக்கில் பிரதிவாதியாக சேர்ந்து கொள்வதனை பொருத்து அசல் வழக்கு பிரதிவாதிகளுடன் வழக்கில் செர்ந்து கட்சி செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாக உள்ளது இல்லாது போனால் வழக்கின் தன்மை முற்றிலுமாக பாதிக்கப்படக்கூடும். பிரதிவாதிகளின் வகையறாவை சேர்ந்த இதில்கண்ட மனுதாரர் உத்தேச 5 ம் பிரதிவாதியான மனுதாரரை தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம் :-

இந்த வழக்கு தற்போது பட்டியல் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு சாட்சி PW-1 யை குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய நிலையில் இந்த வழக்கு பிரதிவாதிகளின் தூண்டுதலின் பெயரில் மனுதாரர்/உத்தேச 5-ம் பிரதிவாதி இந்த நம்பர் வழக்கின்

விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே இந்த நம்பர் வழக்கில் உடையப்பதேவர் வகையறாவை சேர்ந்தவர்களை பிரதிவாதிகளாக தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுவிட்ட நிலையில் தற்போது மனுதாரர்/உத்தேச 5-ம் பிரதிவாதியை இந்த நம்பர் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் எதுவும் தேவையில்லை. மனுதாரர்/உத்தேச 5 பிரதிவாதியை இந்த நம்பர் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசிய காரணம் எதுவும் இன்றி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எந்தவகையில் பார்த்தாலும் இம்மனு ஏற்புடையது அல்ல. எனவே மனுதாரரின் மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது உத்தேச 5ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது மனுவில் தாவா வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகள் மீது உரிமைவிளம்பல் மற்றும் செயலுறுத்துக்கட்டளை மற்றும் அதனை தொடர்ந்த நிரந்தரதடையாணை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் பிரதிவாதிகள் வகையறாவான உடையப்பதேவர் வகையறாவை முக்கியமான நபர் என்றும், அவருக்கு வழக்கு தொடர்புடைய அனைத்து விவரங்களும் தெரியும், அதனால் அவரை தரப்பினராக சேர்க்க வேண்டுமென்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் வழக்கு விசாரணை தற்போது வா.சா.1யை குறுக்கு விசாரணை செய்ய நிலுவையில் உள்ள நிலையில் வழக்கை காலதாமதப்படுத்த மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், உடையப்பதேவர் வகையறாவை சேர்ந்தவர்கள் ஏற்கனவே வழக்கில் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரை தாவா வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

தாவா வழக்கானது வாதிகளால் தாவா கோவிலுக்கான திருப்பணி செலவு, குடமுழுக்கு விழா செலவு ஆகியவற்றை வாதிகளிடம் இருந்து பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு ஆலயத்தினை வாதிகள் வழிபடுவதை பிரதிவாதிகள் தடுக்கக்கூடாது என்றும், பிரதிவாதிகளுக்கு எதிராக அனைத்து பிரதிவாதிகளையும் முத்துவயிறு அம்பலம்,

உடையப்பதேவர் வகையறாவின் பிரதிவாதிகள் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குரையில் வழக்கு கோவிலானது தாவா கிராமத்தில் உள்ள நாட்டார்களான மன்னத்தேவர் வகையுறா, சோமத்தேவர் வகையறா, பெரிச்சித்தேவர் வகையறா, வேடன் வகையறா, வாண்டான் குட்டையன் வகையறா, பாலகோனார் வகையறா, பிள்ளையப்பர் சேர்வை வகையறா, குடும்பன் வகையறா மற்றும் பிரதிவாதிகள் வகையறாவான முடிமலை முத்துவயிறு அம்பலம் வகையறாவை சேர்ந்த நாட்டார்களால் நடத்தி வரப்படுகிறது என்றும், பிரதிவாதிகள் வழக்கு சொத்து அவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்பதுபோல் 2013 ல் பிரச்சனை செய்து பஞ்சாயத்து பேசப்பட்டதாகவும், தற்போதும் பிரதிவாதிகள் தாவா கோவிலை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்று கட்சி செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் உத்தேச 5ம் பிரதிவாதி பிரதிவாதிகளின் வகையறாவை சேர்ந்தவர் என்று அவரது மனுவில் கட்சி செய்யப்பட்ட நிலையில் மேற்படி பொருண்மையானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் அவர்களுடைய எதிருரையில் மறுக்கப்படவில்லை. எனவே வழக்கெழு வினாவை தீர்மானிப்பதற்கு உத்தேச 5ம் பிரதிவாதி / மனுதாரர் அவசியமான தரப்பினர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 04-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**</u>: இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u> : இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.11.04 17:52:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**

**I.A.No.02/2025**

**O.S.No. 88/2017**

**நாள். 04.11.2025**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**அறந்தாங்கி.**